Royal College of Anaesthetists

# மயக்க மருந்து வழங்கல் – ஆபத்துகள் மற்றும் பக்க விளைவுகள்

# நடுக்கம்

## இந்த சிற்றேட்டைப் பற்றி

இந்தச் சிற்றேடு, **மயக்க மருந்து வழங்கலுக்குப்பின் வரக்கூடிய நடுக்கத்தைப் பற்றியது**. உங்களுக்குப் பொது அல்லது ஒரு பகுதிக்கான மயக்க மருந்து வழங்கப்பட்டால், இது நீங்கள் அனுபவிக்கக்கூடிய ஒரு பக்க விளைவு. அது நடுக்கத்திற்கான காரணங்களையும் மற்றும் அதற்கு என்ன செய்யலாம் என்றும் விளக்குகிறது.


நீங்கள் வெவ்வேறு வகை மயக்க மருந்து வழங்கலைப்பற்றி எங்கள் இணையத் தளத்தில் வெவ்வேறு மொழிகளில் இங்கு படிக்கலாம்: www.rcoa.ac.uk/patientinfo/translations#languages.

## நடுக்கம் என்றால் என்ன?

- நடுக்கம் என்பது, குளிரான உணர்வுக்கு உடலின் இயல்பான பதில். சூடாக இருக்க, உடலில் உள்ள தசைகள் விரைவாகச் சுருங்கித் தளர்கின்றன, இது நடுக்கத்தை ஏற்படுத்துகிறது.
- அறுவைச் சிகிச்சைக்குப்பின் வரும் நடுக்கம் சங்கடமாக இருக்கலாம், ஆனால், அது ஆபத்தானது அல்ல, மற்றும் பொதுவாக அது 20 முதல் 30 நிமிடங்களில் நின்றுவிடுகிறது.
- நடுக்கம், உங்கள் உடலுக்குக் கூடுதலான ஆக்ஸிஜன் தேவையை ஏற்படுத்துகிறது. முகமூடி மூலம் உங்களுக்கு கூடுதல் ஆக்ஸிஜன் தேவைப்படலாம்.

## இது நிகழ எவ்வளவு வாய்ப்புள்ளது?

**ஒவ்வொரு 100 பேரில்**



**சுமார் 15 பேருக்கு இது நிகழ்ந்தது**

**சுமார் 85 பேருக்கு இது நிகழவில்லை**

இந்த எண்கள் ஆராய்ச்சி ஆய்வுகளிலிருந்து வருகின்றன. எங்கள் பின்வரும் இணையதளத்தில் நாங்கள் எங்கள் எண்களை எங்கு பெற்றோம் என்பதை நீங்கள் பார்க்கலாம்: www.rcoa.ac.uk/patientinfo/risks/evidence.

## மயக்க மருந்துக்குப் பிறகு நடுக்கம் ஏற்படுவதற்கு என்ன காரணம்?

- அறுவைச் சிகிச்சை அரங்கங்கள் குளிர்ச்சியாக இருக்கலாம். அறுவைச் சிகிச்சையின்போது, உங்கள் உடலின் பகுதிகளில் குளிர்க் காற்று படலாம், அதனால் உங்கள் உடலின் வெப்பநிலை குறையலாம்.
- சில நேரங்களில் மயக்க மருந்துகள் மற்றும் வாயுக்கள் உங்கள் வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் உடலில் உள்ள சமிக்ஞைகளை பாதிக்கின்றன.
- நடுக்கம், ஒரு பொது மயக்க மருந்து வழங்கலுக்குப் பின் ஏற்படலாம், மற்றும் ஒரு பகுதிக்கான மயக்க மருந்து வழங்கலுக்குப் பிறகும் கூட (எபிட்யூரல் அல்லது முதுகெலும்பு சார்ந்தது) இது ஏற்படக்கூடும்.

## உடல்நலப் பராமரிப்புக் குழு என்ன செய்யலாம்?

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, மீட்பு அறையில் ஒரு செவிலியர் உங்களுடன் எப்போதும் இருப்பார். அவர் உங்கள் வெப்பநிலையைச் சரிபார்ப்பார், மற்றும் உங்களுக்குக் கதகதப்பான போர்வைகளையோ அல்லது சூடான ஒரு பானத்தையோ வழங்குவார்.

இது உதவவில்லை என்றால், குழு உங்களை சூடேற்றுவதற்கான மருந்துகளை அல்லது நரம்பு வழியாக சூடான திரவங்களைக் கொடுக்கலாம்.

## நானாகவே என்ன செய்யலாம்?

நீங்கள் அறுவைச் சிகிச்சை அரங்கத்துக்குச் செல்லக் காத்திருக்கும்போது, முடிந்தவரை வெதுவெதுப்பாக இருக்க முயற்சி செய்யுங்கள். நீங்கள் அறுவைச் சிகிச்சைக்கு முன்பு வெதுவெதுப்பாக இருந்தீர்கள் என்றால், அதன்பிறகு நீங்கள் குளிராக உணர்வதற்கான வாய்ப்புகள் குறைவு.

நீங்கள் குளிராக உணர்கிறீர்கள் என்றால், அதைச் செவிலியரிடம் தெரிவியுங்கள். அவர்கள் உங்களுக்குப் போர்வைகளைக் கொடுக்க முடியும்.

நீங்கள் வீட்டிலிருந்தே குளிருக்கான உடைகளையும் செருப்புகளையும் மருத்துவமனைக்குக் கொண்டு வரலாம்.

## இதைத் தெரிந்துகொள்வது நல்லது

இதற்குமுன் மயக்க மருந்து வழங்கலுக்குப்பிறகு உங்களுக்கு நடுக்கம் வந்திருந்தது என்றால், வருங்காலத்தில் உங்களுக்கு மயக்க மருந்து வழங்கப்படும்போது அதே உணர்வு உங்களுக்கு மீண்டும் வருவதற்கான வாய்ப்புகள் கூடுகின்றன என்று அர்த்தம் இல்லை.

## பொறுப்பு துறப்பு

இந்தச் சிற்றேட்டில் உள்ள தகவல்கள் துல்லியமாகவும் சமீபத்தியவையாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால், இதற்கு எங்களால் உத்தரவாதம் அளிக்க இயலாது. இந்தப் பொதுத் தகவலின்மூலம், உங்களுக்கு இருக்கக்கூடிய எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடைத்துவிடும் என்றோ, உங்களுக்கு முக்கியமாக இருக்கக்கூடிய அனைத்தையும் இதனால் கையாள இயலும் என்றோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் உங்களுடைய தெரிவுகளை, உங்களுக்கு இருக்கும் எந்தவொரு கவலைகளையும் உங்கள் மருத்துவக் குழுவுடன் விவாதிக்கவேண்டும், அதற்கு இந்தச் சிற்றேட்டை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தலாம். இந்தச் சிற்றேட்டைமட்டும் ஓர் அறிவுறுத்தலாகக் கருதக்கூடாது. எந்தவொரு வணிக அல்லது தொழில் நோக்கத்துக்கும் இதைப் பயன்படுத்த இயலாது. முழு உரிமைத் துறப்புக்கு, தயவுசெய்து இதைப் பாருங்கள்: (www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் “Translators without Borders” என்ற மொழிபெயர்ப்பாளர் சமூகத்தின் மொழிபெயர்ப்பாளர்களால் வழங்கப்படுகின்றன. மொழிபெயர்ப்பு இயன்றவரை துல்லியமாக இருப்பதற்காக இந்த மொழிபெயர்ப்புகளின் தரம் சரிபார்க்கப்படுகிறது. எனினும், துல்லியமின்மைகள் மற்றும் சில தகவல்கள் தவறாகத் தெரிவிக்கப்படும் ஆபத்து உள்ளது.

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எங்களிடம் சொல்லுங்கள்

இந்த காகிதத்துண்டு பிரசுரத்தை விருத்தி செய்ய ஆலோசனைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

இதுபற்றி உங்களுக்கு ஏதேனும் கருத்துகள் இருந்தால், தயவுசெய்து அவற்றை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்: patientinformation@rcoa.ac.uk

**Royal College of Anaesthetists**
சர்ச்சில் இல்லம், 35 ரெட் லயன் சதுக்கம், லண்டன் WC1R 4SG

## www.rcoa.ac.uk

ஆறாம் பதிப்பு, நவம்பர் 2024

இந்த சிற்றேடு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் மதிப்பாய்வு செய்யப்படும்.

**© 2024 Royal College of Anaesthetists**
நோயாளித் தகவல் தாள்களை உருவாக்கும் நோக்கத்துக்காக இந்தச் சிற்றேட்டை நகல் எடுத்துக்கொள்ளலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்தச் சிற்றேட்டின் ஒரு பகுதியை நீங்கள் இன்னொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், சரியான ஒப்புகை வழங்கப்பட வேண்டும், வணிகச் சின்னங்கள், அடையாளக் குறியிடுதல், படங்கள் மற்றும் படவுருக்கள் நீக்கப்படவேண்டும். மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.